# மார்ச் – 23 – சனி

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! ஆவரது திருப்பெயரை ஏத்திடு! திபா. 103:1**

## முதல் வாசகம் : மீக்கா 7 : 14 – 15, 18 - 20

ஆண்டவரே, உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம்முடைய மக்களை உமது கோலினால் மேய்த்தருளும்! அவர்கள் கர்மேலின் நடுவே காட்டில் தனித்து வாழ்கின்றார்களே! முற்காலத்தில் நடந்ததுபோல அவர்கள் பாசானிலும், கிலயாதிலும் மேயட்டும்! எகிப்து நாட்டிலிருந்து நீங்கள் புறப்பட்டுவந்து நாளில் நடந்ததுபோல நான் அவர்களுக்கு வியத்தகு செயல்களைக் காண்பிப்பேன், உமக்கு நிகரான இறைவன் யார்? எஞ்சியிருப்போரின் குற்றத்தைப் பொறுத்து நீர் உமது உரிமைச் சொத்தில் எஞ்சியிருப்போரின் தீச்செயலை மன்னிக்கின்றீர். உமக்கு நிகரானவர் யார்? அவர் தம்சினத்தில் என்றென்றும் நிலைத்திரார். ஏனெனில், அவர் பேரன்பு கூர்வதில் விருப்பமுடையவர். அவர் நம்மீது இரக்கம்காட்டுவார் நம் தீச்செயல்களை மிதித்துப்போடுவார் நம் பாவங்கள் அனைத்தை யும் ஆழ்கடலில் எறிந்து விடுவார். பண்டையநாளில் எங்கள் மூதாதையருக்கு நீர் ஆணையிட்டுக் கூறியதுபோல யாக்கோபுக்கு வாக்குப் பிறழாமையையும் ஆபிரகாமுக்குப் பேரன்மையும் காட்டியருள்வீர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

## நற்செய்தி : லூக்கா 15 : 1 – 3, 11 – 32

அக்காலத்தில், வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கிவந்தனர். பரிசேயரும், மறைநூல் அறிஞரும், "இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே" என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார்: "ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, "அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத்தாரும்" என்றார். அவர் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுக்குள் இளையமகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும்பயணம் மேற்கொண்டார் அங்குத் தாறுமாறாக வாழ்ந்து தம்சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார், எனவே, அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்கத் தம் வயல்களுக்கு அனுப்பினார். அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. அவர் அறிவு தெளிந்தவராய், "என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என்தந்தையிடம் போய், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன், இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன். உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்" என்று சொல்லிக்கொண்டார். "உடனே அவர் புறப்பட்டுத் தம்தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துகொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக்கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித்தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்" என்றார். தந்தை தம்பணியாளரை நோக்கி, "முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள் இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள் நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில் என்மகன் இவன் இறந்துபோயிருந்தான் மீண்டும் உயிர்பெற்று வந்துள்ளான். காணாமற் போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள். "அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, "இதெல்லாம் என்ன?" என்று வினவினார். அதற்கு ஊழியர் அவரிடம், "உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்" என்றார். அவர் சினமுற்று உள்ளேபோக விருப்பம் இல்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், "பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமைபோன்று உமக்கு வேலை செய்துவருகிறேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என்நண்பரோடு நான் மகிழ்ந்துகொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட என்றுமே நீர் தந்ததில்லை. ஆனால் விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம்மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றார். அதற்குத் தந்தை, "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய் என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்துகொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற் போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். "

**தியானம்:** மனிதர்களுடைய பாதுகாப்பு கடவுளில் இருக்கின்றது. கடவுளோடு இணைந்திருக்கும் வரைதான் ஒரு மனிதன் மகிழ்வோடு, சமாதானத்தோடு, ஆசீர்வாதங்களோடு பாதுகாப்பாக வாழ முடியும். செடியோடு இணைந்திருக்கும் வரைதான் கொடிக்குப் பாதுகாப்பு மேலும் அதனால் கனிகளை கொடுக்க முடியும். அதனால் தான் இயேசு சொன்னார் என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது (யோவா.15:5) என்று. ஆண்டவருக்குள், ஆண்டவரில் பெற்றுக்கொள்ள வேண்டிய மகிழ்வை இந்த உலகத்தின் பொருள்கள் மீதும், இன்பத்தின் மீதும் பெற்றுக்கொள்ள நினைத்து கடவுளை மறந்து விலகிச் சென்றால் நாம் அழிந்து போய்விடுவோம். தந்தை வேண்டாம் என்று உதறி தள்ளிவிட்டு அவர் சம்பாதித்த பொருள்களையும், நில புலன்களையும் மட்டும் அபகரித்துக் கொண்டு மகிழ்வாக வாழ முடியும் என்று நினைத்த இன்றைய நற்செய்தியில் நாம் வாசிக்கும் இளைய மகன் போல கடவுளை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு அவர் நாம் வாழ்வதற்காக கொடுத்த பொருள்களையும் செல்வங்களையும் பிடித்துக் கொண்டு வாழ்வதால்தான் நம்முடைய வாழ்க்கையில் பஞ்சங்களும், வறுமைகளும், பிரச்சனைகளும் தலைவிரித்தாடுவதை பார்க்கின்றோம். பிடிக்க வேண்டியவரைப் பிடிக்காமல் பிடிக்கக் கூடாதவைகளை பிடித்துக் கொண்டு வாழ்வதால்தான் சாத்தானின் சோதனைகளுக்குப் பலியாகி இன்று கலங்கி நிற்கின்றோம். ஆனாலும் சிலுவைகள், பாடுகள், இறப்புக்கள் வாழ்வின் முடிவுகள் அல்ல. எவன் ஒருவன் துன்பங்களின் மத்தியில் தன் மீட்பரைக் கண்டுகொள்கின்றானோ அவனே தன் வாழ்வை மீட்டுக்கொள்கிறவன் ஆவான். நான் யாருக்குச் சொந்தம்? என்னுடைய தந்தை யார்? என்னுடைய இந்த நிலைக்குக் காரணம் என்ன? எங்கே இருக்க வேண்டிய நான் இப்போது இங்கே பன்றிகள்கூட வாழ்ந்து கொண்டிருக்கிறேன்? என்று எவன் ஒருவன் தன்னிலை உணர்ந்து, அறிவு தெளிந்தவராய் தன் தந்தையின் அன்புக்கு தன்னை மீண்டும் கையளிக்கின்றானோ அவனே தன் வாழ்வை திரும்பப் பெற்றுக்கொள்கின்றான். “ஆண்டவரின் இரக்கம் எத்துணைப் பெரிது அவரிடம் மனந்திரும்புவோருக்கு அவர் அளிக்கும் மன்னிப்பு எத்துணை மேலானது” (சீரா.17:29). “ஆண்டவர் கூறுவது இதுவே நீ திரும்பி வந்தால் நான் உன்னை முன்னைய நிலைக்குக் கொண்டு வருவேன்” (எரே.15:19). இன்று நமது கண்களை ஆண்டவரின்பால் திருப்பினால் போதும் அவரே நமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவார். ஏனெனில் “நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை” (தி.பா.51:17) “உடைந்த உள்ளத்தாருக்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார்” (தி.பா.34:18). நம்மை மீண்டும் கட்டியெழுப்பும் நமது மீட்பரிடம் நமது வாழ்வைத் திருப்புவோம்.